www.agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | சித்திரக்கலை - I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் : ..................................

அறிவுறுத்தல்கள் :

- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I
- ➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் யமீது எழுதுக.

பகுதி - II
- ➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- ➢ அ பகுதியிலிருந்து இரு வினாவும்,ஆ,இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

- ❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |


## பகுதி – I

❖ 01 தொடக்கம் 05 வரையான வினாவுக்களுக்கு மிகப் பொருத்தமான விடையை A, B, C,D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் செதுக்கல்களின் படங்களிலிருந்து தெரிவு செய்க.


A


B


C


D


E

*01.* A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள மௌரிய கலைக்குரிய அசோகத் தூண்கள் பெருமளவில் நிர்மாணிக்கப்பட்டமை

(1) புத்தர் சரிதையுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் நடைபெற்ற நிலையங்களை நினைவு படுத்துவதன் பொருட்டாகும்.
(2) அசோக மன்னனின் கீர்த்தியை நாட்டிற்கு வெளிப்படுத்துவதன் பொருட்டாகும்.
(3) அசோக மன்னனின் பௌத்த சமயத்தைப் பின்பற்றிய செய்தியைக் குறியீடாகக் கொள்வதன் பொருட்டாகும்.
(4) அசோக மன்னனின் தர்ம பிரசார செயற்பாடுகளை நினைவுறுத்துமுகமாகவாகும்.
(5) அசோக மன்னனின் கலிங்கத்து யுத்த வெற்றியை நினைவுறுத்துமுகமாகவாகும். (……..)

*02.* B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இசுருமுனியாவில் உள்ள கற்பாறையில் செதுக்கப்பட்ட செதுக்கல்,

(1) கலைப் பாணியுடன் கூடிய பண்பினை சித்தரிக்கும் புடைப்பு செதுக்கல்.
(2) இயற்கை கற்பாறையின் அமைப்பை உபயோகித்து செதுக்கப்பட்டுள்ள உயர் புடைப்பு நிருமாணிப்பு.
(3) யானைகளின் இயற்கையான செயற்பாட்டு அசைவுகளை சித்திரக்கின்ற புடைப்பு நிருமாணிப்பு.
(4) நீரைப் பெறுவதன் பொருட்டான குறியீட்டை வெளிக்காட்டும் உயர் புடைப்பு நிர்மாணிப்பாகும்.
(5) யானைகளின் இயற்கையான மெய் நிலைகளைச் சித்தரிக்கும் முழுமைப் புடைப்பு செதுக்கலாகும். (……..)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

*03.* C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள வரலாற்றுக்கு முற்பட்ட கால படைப்பு
(1) இயற்கை வர்ணத்தால் தீட்டப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும்
(2) செதுக்கல் கோட்டமைப்பில் (Engraving) தீட்டப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும்
(3) கரித்துண்டுகளால் கிறுக்கப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும்
(4) கைப்பதிவுகள் மூலம் தீட்டப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும்
(5) மிருகக்கொழுப்பால் தீட்டப்பட்ட குறியீட்டு வடிவங்களாகும் (……..)

*04.* D எழுத்தினால்காட்டப்பட்டுள்ள கற்பலகையானது.
(1) புத்த சரிதையுடன் தொடர்புடைய நிகழ்வொன்றைச் சித்தரிக்கும் பாருத் செதுக்கலாகும்.
(2) புத்த சரிதையுடன் தொடர்புடைய நிகழ்வொன்றைச் சித்தரிக்கும் அமராவதி கலைஞரின் ஆக்கமாகும்.
(3) வரலாற்று செய்தியொன்றைச் சித்தரிக்கும் பாருத் செதுக்கலாகும்.
(4) அமாராவதி தூபிகளிடையே காணப்படும் பலகைச் செதுக்கல்களில் ஒன்றாகும்.
(5) சாஞ்சி தூபியின் தூண் செதுக்கல்களில் பெறுமதிமிக்கதொன்றாகும். (……..)

*05.* E எழுத்தினால் காட்டப்படுவது.
(1) மறுமலர்ச்சிக் காலத்திற்குரிய சிலையாகும்.
(2) மைக்கல் அஞ்சலோவின் சிலையாகும்
(3) கிரேக்க தொன்மைக்கால சிலையாகும்.
(4) கிரேக்க செந்நெறிக்கால சிலையாகும்
(5) கிரேக்க ஹெலனிஸ்ட்கால சிலையாகும். (……..)

❖ **6 தொடக்கம் 10 வரையாக ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருந்தமான விடையைத் தெரிவு செய்க.**

*06.* சந்தைக்கு பொருளொன்றை அறிமுகப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்படும் சுவரொட்டியொன்றில் மிக முக்கியமாக அமைவது.
(1) வடிவங்களையும் வர்ணங்களையும் குறியீட்டு ரீதியாகப் பயன்படுத்தலாகும்.
(2) தொனிப்பொருளுக்குப் பொருத்தமான சுருக்கமான வாசகமொன்றைப் பயன்படுத்துதலாகும்.
(3) நோக்கங்களை எளிமையாகவும் சிக்கலின்றியும் அர்த்தமுள்ள விதத்திலும் விரைவாகவும் வெளிப்படுத்தல் ஆகும்.
(4) குறியீட்டு ரீதியான உருவங்களை தளத்துக்கும் வெளிக்கும் பொருந்தும் விதத்தில் திட்டமிடுதலாகும்.
(5) சிறந்த நிறையைக் கொண்டதாக வர்ணமயமாக நிர்மானிப்பதாகும். (……..)

*07.* ஓவியமொன்றுக்கு வர்ணம் தீட்டும் போது ஓவியரொருவர் அழுத்தம் கொடுப்பது.
(1) மனங்கவர் தன்மைக்காகும்.
(2) தொனிப்பொருளை வெளிப்படுத்திக் காட்டுவதற்காகும்.
(3) கலைநுட்ப பண்பாட்டிற்காகும்.
(4) தனக்கேயுரித்தான பாணிக்காகும்.
(5) பொருள்களை யதார்த்த பூர்வமாகக் காட்டுவதற்காகும். (……..)

*08.* ஆகாய தூரநோக்கு என்பது
(1) கடலின் ஆழப்பகுதியில் உள்ள கப்பலில் இருந்து தெரியும் தூரக்காட்சி
(2) கீழிருந்து மலையில் உச்சியில் தெரியும் தூரக்காட்சி
(3) புகையிரதத் தண்டவாளத்தை நோக்கும்போது தெரியும் தூரக்காட்சி
(4) தாழ்வாக பறக்கும் விமானத்தில் இருந்து கீழ்நோக்கி தெரியும் தூரக்காட்சி
(5) படுத்திருந்து ஆகாயத்தை பார்க்கும்போது தெரியும் தூரக்காட்சி (……..)

*09.* கலை நிர்மானிப்பில் ஒருமைப்பாடு (Unity) என்பது.
(1) ஒத்த வர்ணங்களைப் பயன்படுத்துவதாகும்.
(2) மன ஒருமைப்பாட்டை வடிவமைத்தலாகும்
(3) குழுச் செயற்பாட்டின் மூலம் வடிவமைத்தலாகும்
(4) கட்புல வெளிப்பாடுகள் ஒட்டு மொத்தமாக ஒன்றித்து செயற்படலாகும்.
(5) புதுப்புது கலைப்பாணிகளில் சங்கமிப்பாகும். (……..)




Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

10. நீர் வர்ண ஊடகத்தைப் பயன்படுத்தும் ஓவியத்தில் இருக்க வேண்டிய சிறப்பான பண்பு
(1) தளம் முழுவதும் நிறம் சமநிலையில் பரவப்பட்டிருத்தல்
(2) நீருடன் கலக்கப்பட்ட நிறம் தூரிகை அடிப்பு இருப்பது போல தடித்த நிறப் பிரயோகம்
(3) ஊடுகாட்டும் முறையிலான நிறங்கள் நீருடன் கலக்கப்பட்டிருக்கும் விதத்தைப் பிரதிபலித்தல்
(4) வெள்ளை நிறம் பயன்படுத்தப்படுவதால் நிறங்களின் வன்மை, மென்மை காட்டப்பட்டிருத்தல்
(5) மூலவர்ணங்களில் தடயங்கள் தெளிவாக தெரிதல் (……..)

❖ **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான உருவை P,Q, R, S, T இல் இருந்து தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.**


P


Q


R


S


T

11. போதிகர எனும் கட்டடக்கலை வகைக்கு உரிய கட்டடம்
(1) $P$ (2) $Q$ (3) $R$ (4) $S$ (5) $T$ (……..)

12. மேற்படி கட்டடங்களுள் குள நிர்மாணிப்புடன் தொடர்புபட்ட கட்டடத்தொகுதி
(1) $Q, R$ (2) $P, Q,$ (3) $R, T$
(4) $P,\ T$ (5) $Q, S$ (……..)

13. போயா கருமங்கள் நிறைவேற்றப்படும் உபதேசகர கட்டடக்கலை வகைக்குரிய கட்டடம்
(1) $P$ (2) $Q$ (3) $R$ (4) $S$ (5) $T$ (……..)

14. புலுகுனாவ ஆசனகர கட்டடம்
(1) $S$ (2) $T$ (3) $P$ (4) $Q$ (5) $R$ (……..)

15. ரன்மசு பூங்காவின் குள அமைப்பு.
(1) $P$ (2) $Q$ (3) $R$ (4) $S$ (5) $T$ (……..)

❖ **16 தொடக்கம் 20 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் சரியான விடையைத் தெரிவு செய்க**

16. எம்.சார்லிஸ்
(1) மாளிகாகந்த பிரிவெனையில் கலையைக் கற்றவர்
(2) நடைமுறையில் இருந்த விகாரைச் சித்திரக் கலைமரபுகள் வளர்ச்சியடைவதற்கு கைகொடுத்த கலைஞர்
(3) லித்தோ அச்சு சித்திரத்தின் மூலம், பௌத்த சமய எழுச்சியை ஏற்படுத்திய கலைஞர்
(4) தேசிய சித்திரக்கலையை வெளிநாட்டுக் கலைமரபுகளில் இருந்து விடுவித்த கலைஞர்
(5) கண்டி, சுவரோவிய மரபுக்கு புத்துயிர்பு வழங்கிய கலைஞர் (……..)

17. புத்தபகவான் இலங்கைக்கு மூன்று முறை வந்தமையையும் அவை தொடர்பான வரலாற்றுச் செய்திகளையும் அழகான முறையில் ஓவியமாக்கியிருப்பது.
(1) கொழும்பு சேதவத்த விகாரையில்
(2) களனி ரஜமகா விகாரையில்
(3) மகியங்கனை ரஜமகா விகாரையில்
(4) மாளிகாகந்த வித்யோதய பிரிவென விகாரையில்
(5) கோதமி விகாரையில் (……..)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

18. அமராவதி செதுக்கல்களின் மிகச்சிறப்பான பண்பாக கருதப்படுவது
   (1) வட்டவடிவமான தளத்தில் செதுக்கப்பட்டிருக்கும்
   (2) யானைத்தந்த செதுக்கலுக்கு ஒப்பானவை
   (3) உணர்வு வெளிப்படுத்தும் உருவங்கள்
   (4) புத்தருக்கு பதிலான குறியீடுகள் பயன்படுத்தப்பட்டிருத்தல்
   (5) புத்தசரிதைக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டிருத்தல் (……..)


19. பாருத் கல் வேலியின் கற்பலகைச் செதுக்கலின் மூலம் அதிகமாகப் புலப்படுத்தப்படுவது.
   (1) புத்தரின் வாழ்க்கை சார்ந்த நிகழ்வுகளாகும்.
   (2) ஜாதகக் கதைச் சம்பவங்களாகும்.
   (3) வரலாற்றுச் சம்பவங்களாகும்.
   (4) போதித்தவரை விலங்குகளாகக் காட்டும் ஜாதகக் கதைச் செய்திகளாகும்.
   (5) மனித உருவங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்ட நிகழ்வுகளாகும். (……..)


20. எகிப்திய புதிய ராசதானிக் கால சிற்பங்களின் மூலம் சிறப்பாக வெளிப்படுத்தப்படுவதாகும்.
   (1) மரபு ரீதியான பண்புகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளமையாகும்.
   (2) மரபு ரீதியான அம்சங்களும் யதார்த்த பூர்வமான அம்சங்களும் சம நிலையில் பயன்படுத்தப் பட்டுள்ளமையாகும்.
   (3) இயற்கைப் பண்புகளுக்கு அழுத்தம் கொடுத்து சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.
   (4) மரபு ரீதியான அம்சங்களைக் கவனத்திற் கொள்ளாமையாகும்.
   (5) பாரா அரசர்களின் வீர பராக்கிரமங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும். (……..)

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைக் கீழே தரப்பட்டுள்ள U, V,W,X,Y ஆகிய செதுக்கல்களிலிருந்து தெரிவு செய்க.**


U


V


W


X


Y

21. U எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'சூரசம்ஹாரம்' என்ற ஓவியம் பற்றிய பொருத்தமற்ற கூற்று யாது?
   1) மேலைத்தேய கலைமரபிற்கமைய முப்பரிமாண இயல்புகளைக் காட்டும் விதத்தில் வர்ணமிடப்பட்டுள்ளது.
   2) கீழைத்தேய கலைப் பண்புகளைக் கொண்டதாக கதைகூறும் பாணியிலிருந்து வேறுபட்ட விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.
   3) சாஸ்திராலய யதார்த்தவாதக் கலைப்பண்புகளைக் கோயில் ஓவியக்கலையில் இணைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
   4) ராஜா ரவிவர்மாவின் கலைப் பண்புகளின் செல்வாக்குக்குட்பட்டுள்ளது.
   5) ஆங்கில - இந்திய மரபுரீதியான பண்புகளுக்கமைய வரையப்பட்டுள்ளது. (……..)

22. V எழுத்தினால் காட்டப்படும் பாரதத்தின் (இந்திய) செதுக்கல் கலையின் மேன்மையை வெளிக்காட்டும் இவ் அமைப்பு.
   (1) பாரூத் ஸ்துாபத்தின் கல்வேலி, தோரணமாகும்.
   (2) அமராவதி ஸ்துாபத்தின் கல்வேலி, தோரணமாகும்.
   (3) சாஞ்சி ஸ்துாபத்தின் கல்வேலி, தோரணமாகும்.
   (4) சாதவனர் கால துாபத்தின் கல்வேலி, தோரணமாகும்.
   (5) அஜந்தா குகை உள்வாசல் கல்வேலி, தோரணமாகும். (……..)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

23. W எழுத்தினால் காட்டப்படும் கடினமான செயல்' எனும் இந்திய காந்தார சிலை
(1) யதார்த்த தன்மையுடன் செய்யப்பட்ட புத்தசிலையாகும்
(2) புத்த பெருமானின் மனவுறுதியையும் சித்தரிப்பதாகும்
(3) நலிந்த துறவியொருவரைச் செதுக்குவதற்கான கலைத்துவ முயற்சியாகும்
(4) காந்தார தேசத்தில் செதுக்கப்பட்ட யதார்த்தபூர்வமான புத்தர் சிலைகளுள் சிறப்பானதொரு நிர்மாணிப்பாகும்
(5) கிரேக்க அப்பலோ தெய்வத்தை பின்பற்றி இச்சிலை ஆக்கப்பட்டுள்ளது (…...)

24. X எழுத்தினால் காட்டப்பட்டுள்ள தாதுகோபம்.
(1) தம்புள்ள விகாரையில் காணப்படுகிறது.
(2) தெகல்லொறுவ விகாரையில் காணப்படுகிறது.
(3) தந்திரிமலை விகாரையில் காணப்படுகிறது.
(4) ஹங்குரன்கெத்த விகாரையில் காணப்படுகிறது.
(5) கிரி விகாரையில் காணப்படுகிறது. (…....)

25. Y எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'நடனப்பெண் ' என்ற ஓவியம்,
(1) தனிநபர் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) கீழைத்தேய கலை நியதிகளைப் பின்பற்றி நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(3) மனப்பதிவுவாத கலைப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.
(4) பின்மனப்பதிவுவாத ஓவிய மரபின் பண்புகளைச் சித்திரிப்பதாகும்.
(5) சாஸ்திராலய யதார்த்தவாத ஓவிய மரபுக்கமைய வரையப்பட்டதாகும். (.........)

❖ **26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் சரியான விடையைத் தெரிவு செய்க**

26. மகியங்களையில் தாதுகர்ப்பத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற ஓவியங்களிடையே
(1) சசஜாதகத்தைச் சித்தரிக்கும் சித்திரம் ஒன்று காணப்பட்டது.
(2) புத்தர் சிலை அல்லது மாரபராஜயைக் காட்டும் சித்திரத்துண்டும் கிடைத்துள்ளது.
(3) தபசி பள்ளுக தேபானன் காணப்படும் சித்திரத்துண்டும் கிடைத்துள்ளது.
(4) இந்திரஜால குகைக்கு சக்கர தெய்வம் வருகை தரும் சந்தர்ப்பத்தைக் காட்டும் சித்திரமும் கிடைத்துள்ளது.
(5) தேவர்கள் அமர்ந்திருக்கும் வடிவம் ஐந்தினைக் கொண்ட சித்திரமொன்றும் கிடைத்துள்ளது. (……..)

27. புத்தரை மனித வடிவில் சித்திரிப்பதற்குக் காந்தாரக் கலைஞர்கள் எடுத்த முயற்சியினால்
(1) புத்தரின் உருவில் ஆத்மீக பண்புகளை காட்ட முடிந்தது
(2) தருமத்தை பயிற்சி செய்வதை விட கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வழியேற்படுத்தப்பட்டது
(3) புத்தர் சிலைகளை வணங்குவதற்கு அதிக சந்தர்பம் ஏற்படுத்தப்பட்டது
(4) ஓவியம் சிற்பம் என்பவற்றில் வளர்ச்சி ஏற்பட்டது
(5) புத்தரின் உருவை ஆக்குவது அவருக்குச் செய்யும் அவமரியாதை என்ற கருத்து நீக்கப்பட்டது (……..)

28. யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை அம்மன் கோவில் உதாரணம் ஓவியத்தை வரைந்தவர்.
(1) வை. சிவசுப்ரமணியம் (2) நாராயன சுவாமி
(3) கணேஸ்வர ஆச்சாரி (4) பெரியதம்பி சுப்ரமணியம்
(5) அமர்தா ஷேக்கிள் (……..)

29. ஆசன கர என்பது.
(1) புத்த சிலை சுற்றி நிர்மாணிக்கப்படும் கட்டடம்.
(2) அரச மரத்தை சுற்றி நிர்மாணிக்கப்படும் கட்டடம்.
(3) வஜிராசனத்தை சுற்றி நிர்மாணிக்கப்படும் கட்டடம்.
(4) சிறிய சைத்தியத்தை சுற்றி நிர்மாணிக்கப்படும் கட்டடம்
(5) ஸ்ரீபாதச் சுவட்டை நிர்மாணிக்கப்படும் கட்டடம் (……..)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

30. பண்டைய காலத்தில் பிக்குமார் ஸ்தானம் செய்வதற்கு அமைந்த கட்டடம்.
(1) ஐந்தாகர (2) பதனாகர (3) போதிகர
(4) உபதேச கர (5) ஆசன கர (……..)

❖ **31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள கலை நிர்மாணிப்புகளின் உருவப் படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**

31. அருகில் காட்டப்பட்டுள்ள செதுக்கலைக் காணக்கிடைப்பது,




(1) இசுறுமுனியவின் 'ரன்மசு' பூங்காவில் அமைந்துள்ள பாறையில் ஆகும்.
(2) இசுறுமுனியவில் இயற்கையாக அமைந்துள்ள பாறையின் மேற்பகுதியில் ஆகும்.
(3) 'ரன்மசு' பூங்காவிலுள்ள தடாகமொன்றிற்கு அருகில் ஆகும்.
(4) இசுறுமுனிய தடாகத்துக்கருகில் இயற்கையாக அமைந்துள்ள பாறையில் ஆகும்.
(5) இசுறுமுனிய அரும்பொருட்காட்சியத்தில் ஆகும். (……..)

32. அருகில் காட்டப்பட்டுள்ள கட்டடக்கலை மாதிரியினால் காட்டப்பட்டுள்ள தேவாலயம்.



(1) நைல் நதிக் கரையில் ஹோரஸ் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(2) தீபசில் நிர்மாணிக்கப்பட்ட லக்ஸோர் தேவாலயமாகும்.
(3) அமொன் கடவுளுக்காக நிர்மாணிக்கப்பட்ட கர்ணாக் தேவாலயமாகும்.
(4) ராம்செஸ் அரசனால் நைல் நதிக்கரையில் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
(5) மத்திய ராசதானிக் காலத்தில் எகிப்தில் நிர்மாணிக்கப்பட்டதாகும். (……..)

33. அருகில் காட்டப்பட்டுள்ள மட்பாண்டம்



(1) கிரேக்க காலத்திற்குரியது.
(2) எகிப்திய காலத்திற்குரியது
(3) சிந்துவெளி காலத்திற்குரியது.
(4) உரோமானிய காலத்திற்குரியது.
(5) அனுராதபுர காலத்திற்குரியது.
(6)
(……..)

34) அருகில் காட்டப்பட்டுள்ள ஓவியத்தின் சிறப்பாக அமைவது



(1) முப்பரிமான முறையில் வரையப்பட்டுள்ளமை
(2) தெய்வீகத்தன்மை வெளிப்படுத்தப்பட்டுள்ளன
(3) தற்கால ஆடை ஆபரண அமைப்பில் உருவத்தை வெளிபடுத்தியமை
(4) தூரநோக்கு சிறப்பான முறையில் வெளிப்படுத்தப்பட்டமை.
(5) இருளான வர்ணப்பிரயோகத்தினூடாக பிரதான உருவம் ஒளிப்பாக்கி காட்டப்பட்டுள்ளமை.
(……..)

35) அருகில் காட்டப்பட்டுள்ளசிலை



(1) குப்த கலைமரபிற்குரியது
(2) மதுர கலைமரபிற்குரியது
(3) காந்தார கலைமரபிற்குரியது
(4) அமராவதி கலைமரபிற்குரியது
(5) சாதவனர் கலைமரபிற்குரியது
(……..)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

❖ **வினா இல 36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக கேட்கப்படும் வினாவிற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் இடுக.**



36) இவ் ஓவியத்தின் பகுதியானது எவ்வோவியத்தில் தலைப்புடன் தொடர்புபட்டதாகும்?
(1) ஆதாமைப் படைத்தல்
(2) கடைசி இராப்போசனம்
(3) கடைசித் தீர்ப்பு
(4) புனித பீற்றரை சிலுவையில் அறைதல்
(5) ஆதாம்,ஏவாள் தேவலோகத்தில் இருந்து விரட்டப்படுதல் (……..)

37) இவ்வோவியம் காணப்படும் இடம்
(1) வத்திக்கான் சிஸ்ரைன் தேவாலய உட்கூரை
(2) வத்திக்கான் சிஸ்ரைன் தேவாலய பலீபீடச் சுவர்
(3) உரோம் சென் பீற்றர் தேவாலய பலீபீடச் சுவர்
(4) மிலன் சாந்தா மரியா மடலாயச் சுவர்
(5) வத்திக்கான் ஸ்ரென்சா டெலாசிக்னா நசுரா கட்டட சுவர் (……..)

38) இவ்வோவியத்தில் வரைநுட்ப முறையில் சிறப்பாகக் கருதக்கூடியது
(1) பிரமாண்டமான பிரஸ்கோ சீக்கோ சுவர் ஓவியம்
(2) பிரமாண்டமான பிரஸ்கோ புவனோ சுவர் ஓவியம்
(3) பிரமாண்டமான பிரஸ்கோ சீக்கோ உட்கூரை ஓவியம்
(4) பிரமாண்டமான பிரஸ்கோ புவனோ உட்கூரை ஓவியம்
(5) பிரமாண்டமான இயற்கை வர்ண ஓவியம் (……..)

39) இவ்வோவியத்தில் காணப்படும் மனித உருவங்களின் தனித்துவமான இயல்பாகக் கருதக்கூடியது
(1) இயற்கைப் பண்புமிக்கதாக காணப்படல்
(2) மரபு சம்பிரதாயங்களுக்கமைய வரையப்பட்டுள்ளமை
(3) சிற்ப இலட்சனப் பண்புகள் உருவங்களில் பிரதிபலிக்கப்பட்டுள்ளமை
(4) கிறீஸ்தவக் கதைகளை உருவங்கள் மூலம் வெளிப்படுத்தியமை
(5) மிகப் பிரமாண்டமான அதிக மனித உருவங்களை வரைந்துள்ளமை (……..)

40) இவ்வோவியத்தில் தளச்சித்தரிப்பின் சிறப்பாகக் கருதக்கூடியது
(1) தளம் முழுவதும் உருவங்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளது.
(2) அரை வளைவு தன்மை கொண்ட தளப்பரப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது.
(3) மத்திய தளத்தை மையமாகக் கொண்டு ஓவிய வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.
(4) தேவ உலகம், பூவுலகம், பாவிகளின் உலகம் என மூன்று தளப்பரிமான சித்தரிப்பைக் காட்டியமை
(5) ஓவியம் முழுவதும் சுதை மரபை பின்பற்றாது முக்கியமான பகுதிகளுக்கு மாத்திரம் சுதை மரபு பயன்படுத்தப்பட்டமை (……..)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி II

➢ அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

### உப பகுதி ‘அ’
### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**01. “சமய எண்ணக்கருவை மேம்படுத்தும் முகமாக வழிபாட்டுத் தலங்களில் சுவரோவியங்கள் வரையும் முறை வளர்ச்சி பெற்றது.”**

(i) புதிய களனி விகாரையில் வரையப்பட்டுள்ள சோளியஸ்மென்டிசின் புத்தசரிதையை விளக்கும் இரண்டு ஓவியங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் ஆலய விதானத்தில் வரையப்பட்டுள்ள “சூர சங்ஹாரம்” ஓவியத்த சுருக்கமாக விமர்சிக்குக (05 புள்ளிகள்)

(iii) சித்தார்தரின் திருமணம் என்ற விடயத்தினை ஆ. சார்ரிஸ், சோமபந்து வித்தியாபதி ஆகியோர் ஓவியமாக வெளிப்படுத்திய விதத்தினை ஒப்பிட்டு விமர்சிக்குக. (08 புள்ளிகள்)

**02. ஈசுருமுனிய விகாரை காலத்தில் வேறுபட்ட பல கலைப் பெறுமதியான படைப்புகளைக் கொண்டுள்ளது.**

(i) ஈசுருமுனிய பாறையில் காணப்படும் இரு சிற்பங்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேற்படி சிற்பங்களில் காணப்படும் பல்லவ கலைப்பண்புகளை அறிமுகம் செய்க. (05 புள்ளிகள்)

(iii) றன்மசு பூங்காவில் இருந்து பெறப்பட்ட சிற்பத்தில் கலைஞர் கருத்தை வெளிப்படுத்த முற்பட்ட விதத்தினை விளக்குக. (08 புள்ளிகள்)

**03. பொலநறுவையில் சோழராட்சிக்கு பின் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த மனைகள் திராவிடக் கட்டடக்கலையின் செல்வாக்குகளை அவதானிக்க முடியும்.**

(i) பொலநறுவையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பௌத்த சிலைமனைகள் மூன்று தருக. (02 புள்ளிகள்)

(ii) பொலநறுவை 2 ஆம் சிவாலயத்தின் அழகியல் அம்சங்களை சுருக்கமாக விமர்சிக்குக. (05 புள்ளிகள்)

(iii) பொலநறுவை பௌத்த சிலைமனைகளில் அவதானிக்கூடிய திராவிட கலை அம்சங்களை விமர்சிக்குக. (08 புள்ளிகள்)

### உப பகுதி ‘ஆ’
### (சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**04. பாரதத்தின் பிரதான சைத்திய நிர்மாணிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மிக முன்னேற்றகரமான பௌத்த சமய சிற்பக்கலையொன்று உருவாகியது.**

(i) அமராவதி தூபி தூண்களிலிருந்து கிடைக்கப்பெற்ற செதுக்கல்கள் இரண்டைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) பாரூத் சைத்தியத்தின் கல்வேலி செதுக்கல்கள் என்பன பற்றிச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக. (05 புள்ளிகள்)

(iii) சாஞ்சி சிற்பக் கலைஞருக்கு புத்தபகவானை உருவமாகக் காட்ட முடியாது போன போதிலும் அவர் தொடர்பான சம்பவங்களை உண்மையாகச் சித்தரிப்பதற்கு அது தடையாக அமையவில்லை. அதற்காக அவர்கள் பயன்படுத்திய உபாயங்களை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)



agaram.lk

**உப பகுதி 'ஆ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)**

***05.*** **19 நூற்றாண்டுகளில் இந்தியாவின் ஓவிக்கலைஞர்கள் பலர் பல்வேறு மேலைத்தேயக் கலை மரபுகளை விடுத்து சுதேசிய கலைமரகளில் ஓவியங்களாக்கினர்.**

(i) அபினிந்திர நாத் தாகூரின் இரு ஆக்கங்களை குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இந்திய ஓவிய மறுமலர்சியின் பின்னணி பற்றிச் சுருக்கமாக அறிமுகஞ் செய்க. (05 புள்ளிகள்)

(iii) நந்தலால் போஸின் நஞ்சுண்ட சிவன் ஓவியத்தை மதிப்பீடு செய்க. (08 புள்ளிகள்)

**உப பகுதி 'இ'**

**(சித்திரக்கலையில் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)**

***06.*** **உன்னத கலைஞர்களின் படைப்பாற்றலால் இத்தாலியில் ஓவியத்துறை சார்ந்த மறுமலர்ச்சி ஏற்பட்டது.**

(i) மைக்கல் ஆஞ்சலோவின் சிற்பங்கள் இரண்டு தருக. (02 புள்ளிகள்)

(ii) ராபாயலின் "பர்னாஸ்சோ " என்ற ஓவியத்தை சுருக்கமாக மதிப்பிடுக. (05 புள்ளிகள்)

(iii) "டாவின்சியின் கடைசி இராப்போசன ஓவியம் உணர்வு ரீதியான மிகச் சிறந்த ஓவியமாகும்" இக் கூற்றை விமர்சிக்குக. (08 புள்ளிகள்)

***07.*** **எளிய கேத்திர கணித உருவங்களைப் பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட கிரேக்கச் சிற்பக்கலை, கலைஞர்கள் முதிர்ச்சியடைந்ததும் உன்னத நிலையை எய்தியது.**

(i) கிரேக்க கால பூச்சாடி வகைகள் இரண்டை பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) "ஆரம்ப காலத்து (தொன்மைக்) கிரேக்கச் சிலைகளில் எகிப்திய செல்வாக்குக் காணப்பட்டது" சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) "கிரேக்க கலைஞர்கள் மேன்மைக்(செந்நெறிக்) காலத்தில் சிலையமைப்பில் தேர்ச்சி நிலையை அடைந்த போதிலும் அவர்களின் சிலைகள் ஹெலனிஸ்டிக் காலத்திலேயே மிக வெளிப்படையாகத் தோன்றின." உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC

| தரம் :- 12 (2021) | சித்திரக்கலை - II | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- ✶ உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- ✶ விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையயளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள் கூட்டமும்**

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன் கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந்தீட்டுக.**

- கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- பொருட்களினதும் செடி / கிளையினதும் இயல்பு, வெளிப்புறத்தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, மற்றும் தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன கவனத்திற் கொள்க.
- பொருள் தொகுதி உமக்குத் தெரிகின்ற தன்மையில் வரைந்து, அதன்மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற்கொண்டு வர்ணந்தீட்டுக.
- வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.
- பொருள் தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.
- பொருள் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் – 2020

FWC


**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :- 12 (2021) | சித்திரக்கலை – II | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

Agaram.LK - Keep your dreams alive!

மேற்பார்வையாளருக்குரியது.

நிலை பொருட்கூட்ட வரைபு



ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கள்

1. பெட்டி
2. பிளாஸ்டிக் யக்
3. சீத்தை துணி
4. குரோட்டன் கிளை
5. கடதாசிச் சுருள்

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் - 2020

Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, March - 2020

FWC

| தரம் :- 12 (2021) | சித்திரக்கலை – III | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- கீழே தரப்பட்டுள்ள அ, ஆ, இ ஆகிய பகுதிகளிலிருந்து ஒரு பகுதியை மாத்திரம் தெரிவு செய்க. அதிலிருந்து ஒரு தலைப்பை மட்டும் தெரிவு செய்து வர்ணச்சித்திரம் ஒன்றை வரைக.
- உமது பரீட்சை சுட்டெண்ணையும் தெரிவு செய்த விரைவின் இலக்கத்தையும் தாளில் பின்புறத்தில் இடது பக்க மூலையில் தெளிவாக எழுதுக.
- விரும்பிய வர்ண ஊடகம் (ஒன்றுக்கு மேற்பட்ட வர்ண ஊடகங்கள் கலந்தும்) பயன்படுத்தலாம்.

### பகுதி அ சித்திர ஒழுங்கமைப்பு

1. பாடசாலை இடைவேளை நேரம்
2. குளத்தில் நீராடும் மங்கையர்
3. தெருவோரம் நடக்கும் இளநீர் வியாபாரம்.
4. திறந்த வெளியொன்றில் மதிய உணவருந்தும் யாத்திரிகர் குழுவினர்

### பகுதி ஆ அலங்கார ஆக்கம்

5. அலரிப் பூக்களையும் இலைகளையும் விருப்பப்படி ஒழுங்குமுறையில் பயன்படுத்தி சீத்தைத் துணி ஒன்றுக்குப் பொருத்தமான பரவுரூப அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.
6. நவீன பாணியிலான பிராணியொன்றின் வடிவத்தைக் கொண்டு பத்திக் முறையில் வர்ணமிடுவதற்குப் பொருத்தமான $2 \times 3$ அடி அளவிலான சுவர் அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.
7. சேலை முந்தானைக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றைப் பாரம்பரிய அலங்கரிப்பு அலங்காரங்களிலிருந்து நிர்மாணிக்குக.

### பகுதி இ கிறபிக் சித்திரம்.

8. "இலங்கைஓவியர்' என்ற சுயசரிதை நூலொன்றுக்கான அழகிய மேலட்டை யொன்றை நிர்மாணிக்குக.
9. ஆயுள்வேத மூலிகை போத்தலொன்றை வைப்பதற்கான பெட்டியொன்றிற்குரிய அலங்கார மொன்றை திட்டமிட்டு, அதற்கு பொருத்தமான பெயரொன்றையும் இடுக.
10. "சூழல் மாசடைவதைப் தடுப்போம் " என்ற தலைப்பில் அழகிய சுவரொட்டி ஒன்றை நிர்மாணிக்குக.



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk